21st January 1964]

proposal to enhance the advance paid to the Government employees for the construction of houses from 24 months pay to 45 months pay?

THE HON. SRI R. VENKATARAMAN: Orders have already been issued restoring the original scheme of sanctioning 45 months pay as advance to the Government servants in the city whose age is 40 and below, and who are drawing a pay of Rs. 500 and below, subject to a maximum of Rs. 18,000 and 36 months' pay as advance to others, subject to certain ceiling limits prescribed, in this behalf.

பஞ்சாயத்து யூனியன்கள் நடத்தும் உயர்நிலைப் பள்ளிகள்

*60 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்கள் ஏதாகிலும் உயர்நிலைப் பள்ளிகள் வைத்து நடத்துகின்றனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No.

திருவண்ணுமலை இடைத் தேர்தல்

*60-அ கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதில் அளிப்பாரா—

1963-ல் திருவண்ணுமலையில் நடந்த இடைத் தேர்தலில் வடாற்காடு மாவட்டத்தில் உள்ள பஞ்சாயத்து யூனியன்களின் ஜீப்கள் உபயோகிக்கப்பட்டனவா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : 1963-ல் வட ஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணுமலையில் நடந்த இடைத் தேர்தலில் 23 பஞ்சாயத்து யூனியன்களின் ஜீப்புகள், போலீஸ், ரெவினியூ அதிகாரிகளின் வேலைகளுக்காக உபயோகப்படுத்தப்பட்டன.

புலவர் கா. கோவிந்தன் : போலீஸ் துறையில் ஏராளமான வாகனங்கள் இருக்கிற நிலையில் பஞ்சாயத்து யூனியன் ஜீப்களை திருவண்ணுமலை இடைத் தேர்தலில் பயன்படுத்தியது ஏன் ?

கனம் திரு சே. ம. அ. மஜீத் : தேர்தல் வேலைக்காக போலீஸ் பூத் இன்ஸ்பெக்ஷன், பாலட் பாக்ஸஸ், பாலட் பேப்பர்ஸ் கொண்டு போவது போன்ற தேர்தல் வேலைக்காகத்தான் ஜீப் உபயோகப் படுத்தப்பட்டது.

புலவர் கா. கோவிந்தன் : அரசாங்கப் பணிக்காக அந்த ஜீப்கள் பயன்படுத்தப்பட்டிருந்தால் அந்த ஜீப்களில் காங்கிரஸ் கொடி இட்ட காகிதத்தால் அந்த ஜீப்களில் உள்ள பேரை மறைத்துச் சென்றது ஏன் ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அம்மாதிரி தகவல் இல்லை. அப்படி ஏதாவது தகவல் கொடுத்தால் பரிசீலிக்கலாம். இருபத்தி